சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்
அசல் வழக்கு எண். 60/2021.

2022 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் -16 ம் நாள் வ. சா. 1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.இந்துலதா, பி.ஏ,பி.எல்., சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ராஜேஸ்வரி | வயது | |
| க/பெ. | ஸ்ரீகுப்புசாமி | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலூக்கா | | தொழில் | |

முதல் விசாரணை-

பிரமாணதாரர் ஆஜர். பிரமாணப் பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் பிரமாணதாரரால் உறுதி செய்யப்பட்டு அவர் வ. சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். அவர் மூலம் 05.09.1966 தேதியிட்ட சுப்பைய கவுண்டர் அவர்களின் பெயரில் ஏற்படுத்தப்பட்ட பாகபாத்திய ஆவணம் (சான்றிட்ட நகல்) அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது) வா.சா.ஆ. 1 ஆகவும், 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை (நகல்) (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது) வா.சா.ஆ. 2 ஆகவும், 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை (நகல்) (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது) வா.சா.ஆ. 3 ஆகவும், சுப்பையா கவுண்டர் இறப்பு சான்றிதழ் (நகல்) வா.சா.ஆ.4 ஆகவும், சுப்பையா கவுண்டர் வாரிசு சான்றிதழ் (நகல்) (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது) வா.சா.ஆ. 5 ஆகவும், கணினி பட்டா வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.
(வா.சா.ஆ.4 மற்றம் 6 ஆவணங்கள் ஒளிநகல் என்பதால் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது).

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

SUB COURT, METTUPALAYAM